# உதயன்

சுடர் : 40
கதிர் : 356

செவ்வாய்க்கிழமை
18 நவம்பர் 2025

கார்த்திகை 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50




## வளலாய் கடற்கரையில் ஒதுங்கியது மார்மச் சிலை

யாழ்ப்பாணம், நவ. 18
அச்சுவேலி வளலாய் கடற்கரையில் நேற்றுத் திங்கட்கிழமை மார்மச் சிலையொன்று கரையொதுங்கியுள்ளது. 11



### திருமலை கடற்கரையில்

# அகற்றப்பட்ட புத்தர் மீண்டும் குந்தினார்!

## அநுர அரசாங்கத்திலும் ஆக்கிரமிப்பு

**திருகோணமலை, நவம்பர் 18**
**திருகோணமலை கடற்கரையில், பிக்குகளால் சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும் கட்டுமானத்தில் இருந்து நேற்றுமுன்தினம் இரவு அகற்றப்பட்ட புத்தர்சிலை, நேற்று உச்சக்கட்டப் பாதுகாப்புக்கு மத்தியில் பொலிஸாராலும், பிக்குகளாலும் மீளவும் பிரதிஷ்டை செய்யப்பட்டது.** 11

## புத்தர் சிலையைப் பாதுகாக்கவே எடுத்துச் சென்றனர் பொலிஸார்!

### அகற்றும் எண்ணம் இல்லை அமைச்சர் விஜேபால விளக்கம்



திருகோணமலை, நவ. 18
திருகோணமலையில் அசம்பாவிதம் ஏதும் ஏற்பட இடமளிக்க முடியாது. அசம்பாவிதங்கள் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் புத்தர் சிலையை நேற்று முன்தினம் இரவு பொலி 11

## அநுரவுடைய ஆட்சியிலும் பௌத்த அடாவடித்தனம்!

### ரவிகரன் எம்.பி. விளாசல்



கொழும்பு, நவ. 18
ஈழத்தமிழர்களின் பூர்வீக இடங்களிலெல்லாம் பேரினவாத அரசுகளால் அடாவடித்தன செயற்பாடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றன. அநுர அரசாங்கமும் இதற்கு விதிவிலக்கில்லை என்று நாடாளு 11

## நம்பி வாக்களித்த மக்களுக்கு துரோகம் செய்துள்ளது அரசு!

### கஜேந்திரகுமார் எம்.பி. காட்டம்



கொழும்பு, நவ. 18
உங்களை நம்பி, நீங்கள் சொன்னதை எல்லாம் நம்பி உங்களுக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கு நீங்கள் முழுமையான துரோகத்தை இழைத்திருக்கிறீர்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் 11

## நகரசபை தவிசாளருக்கு எதிரான செயலாளரின் வழக்கு தள்ளுபடி!

### பருத்தித்துறை நீதிமன்றம் அதிரடி

யாழ்ப்பாணம், நவ. 18
பருத்தித்துறை நகரசபை தவிசாளருக்கு எதிராக, நகரசபைச் செயலாளரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் தொடுக்கப்பட்ட வழக்கை பருத்தித்துறை நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. பருத்தித்துறை மரக்கறிச் சந்தை விவகாரத்தில் நகர 11

### காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்;

## 2028ஆம் ஆண்டளவிலேயே விசாரணைகள் முடிவுறும்!



கொழும்பு, நவ. 18
காணாமல் ஆக்கப்பட்டோருக்கான விசாரணை அலுவலகத்தால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளை 2028ஆம் ஆண்டளவில் நிறைவுசெய்வதற்குத் தீர்மானித்துள்ளதாக நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார். 11

## இருள் சூழ்ந்த பரந்தன் சந்தி; விபத்து, வழிப்பறி அதிகரிப்பு

விரிவு பக்கம்:-02



### முச்சந்தி முரளி

'புத்தர் வந்து சொன்னால் கூட இனிமேல் உந்தப்பிக்குகள் நிலம்பிடிக்கிற விளையாட்ட விடமாட்டினம் கண்டியளோ'

### இந்திய மீனவர்கள் அட்டூழியம்;

## வடமராட்சி மீனவர்களின் வலைகள் அறுத்தழிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 18
வடமராட்சிக் கடற்பரப்பில் நூற்றுக்கணக்கில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய இழுவைப் படகுகளால் வடமராட்சி மீனவர்களின் பல இலட்சம் 11

## இந்திய மீனவர்கள் 31 பேர் நிபந்தனையுடன் விடுவிப்பு!

### பருத்தித்துறை நீதிமன்றம் தீர்ப்பு!

யாழ்ப்பாணம், நவ. 18
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 31 பேர் கடும் நிபந்தனைகளுக்கு அமைய 11

## வனவளத் திணைக்களத்தால் வயல் காணிகள் கபளீகரம்!

### வவுனியா சிதம்பரபுரம் மக்கள் விரக்தி நடவடிக்கை எடுக்க அரசிடம் கோரிக்கை

வவுனியா, நவ. 18
வவுனியா, கள்ளிக்குளம் சிதம்பரம் பிரதேசத்தில் மக்களின் நெற்காணிகளை வனவளத்திணைக்களம் கையகப்படுத்தியுள்ளதுடன், நெற்பயிரை சேதப்படுத்தி தேக்குமரம் நடும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளது என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இது தொடர்பாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளதாவது:-
எமது பூர்வீகக் காணிகளில் விவசாயம் செய்துவந்த நாம், 1987ஆம் ஆண்டு போரால் இடம்பெயர்ந்தோம். 2012ஆம் ஆண்டு மீளக் குடியமர்ந்த பின்னர் எமது காணிகளில் நெற்செய்கை மேற்கொண்டு வருகின்றோம். 11



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| லொத்தர் | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து / ராசி | வெற்றி இலக்கங்கள் | மேலதிகம் |
|---|---|---|---|---|---|
| கொவிசெத | 17.11.2025 | 4258 | L | 07 14 16 22 | விசேட எழுத்து L |
| ஹந்தஹன ராசி சுப பலன் | 17.11.2025 | 1325 | வெற்றி இலக்கினம் மேஷம் | 40 43 47 49 | |
| NLB ஜய | 17.11.2025 | 0284 | W | 1 2 7 5 | |
| மெகா பவர் | 17.11.2025 | 2364 | W | 11 33 49 77 | சுப்பர் இலக்கம் 08 |
| மஹஜன சம்பத | 17.11.2025 | 6016 | V | 0 3 2 2 6 6 | |
| தன நிதானய | 17.11.2025 | 2046 | A | 09 16 31 43 | விசேட எழுத்து A |
| சுப தவசக் | 17.11.2025 | 0132 | வெற்றி இலக்கினம் தும்பம் | 11 24 54 | |

| லொத்தர் | திகதி | தினம் | ஆங்கில எழுத்து / ராசி | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் / சீட்டிழுப்பு வாரம் | மேலதிகம் |
|---|---|---|---|---|---|---|
| சுபிரி தன சம்பத (DLB) | 17.11.2025 | திங்கட்கிழமை | X | 6 6 5 1 0 4 | வெற்றி வாரம் 0724 | |
| Super Ball (DLB) | 17.11.2025 | திங்கட்கிழமை | E | 36 46 54 68 | சீட்டிழுப்பு வாரம் 2990 | |
| சனிதா (DLB) | 17.11.2025 | திங்கட்கிழமை | R | 42 58 59 72 | வெற்றி வாரம் 5151 | |
| SASIRI (DLB) | 17.11.2025 | திங்கட்கிழமை | | 06 16 31 | வெற்றி வாரம் 0820 | |
| லக்ன ராசி (DLB) | 17.11.2025 | திங்கட்கிழமை | தனு | 04 21 44 56 | சீட்டிழுப்பு வாரம் 4702 | |
| KAPRUKA (DLB) | 17.11.2025 | திங்கட்கிழமை | H | 30 33 41 74 | வெற்றி வாரம் 2166 | சுப்பர் இலக்கம் 15 |
| அத கோடிபதி (DLB) | 17.11.2025 | திங்கட்கிழமை | K | 09 23 61 62 | வெற்றி வாரம் 2816 | |

# இருள் சூழ்ந்த பரந்தன் சந்தி; விபத்து, வழிப்பறி அதிகரிப்பு

கிளிநொச்சி, நவ.18

**கிளிநொச்சி மாவட்டத்தின் உப நகரங்களில் ஒன்றாகக் காணப்படுகின்ற பரந்தன் பிரதான சந்தியில் மின்விளக்குகள் பொருத்தப்படாமையால் அந்தப்பகுதி இருளில் மூழ்கியுள்ளது. அதனால் இரவு வேளைகளில் விபத்துகள் மற்றும் வழிப்பறிக்கொள்ளைகள் அதிகரித்துள்ளன என பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.**

பூநகரி, திருகோணமலை, முல்லைத்தீவு ஆகிய வீதிகளை இணைக்கும் வடமாகாணத்தின் போக்குவரத்துக் குவிவு மையங்களில் ஒன்றாகக் காணப்படும் இந்தச்சந்தி நீண்டகாலமாக இருளில் மூழ்கியுள்ளது. இரு அரச வங்கிகள், தபாலகம், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், எரிபொருள் நிரப்பு நிலையம் உள்ளிட்ட சேவை நிலையங்கள் பரந்தன் சந்தியை மையப்படுத்தியே அமைந்துள்ளன. நாளாந்தம் ஆயிரக்கணக்கான மக்கள் அந்தப் பகுதியில் நடமாடுகின்றனர். இரவில் அந்தப்பகுதி இருளில் மூழ்கியிருப்பதால், நாளாந்தம் விபத்துகள் அதிகரித்துள்ளன. வழிப்பறிக் கொள்ளைச் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. இது தொடர்பில் உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-இ)



## கட்டுப்பாடிழந்து வாகனம் விபத்து

### இருவர் படுகாயம்

மன்னார், நவ.18

மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த சிறிய ரகப் பாரவூர்தி, வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியின் அருகில் இருந்த பாலத்துக்குள் தடம்புரண்டது. விபத்தில் வாகனத்தின் சாரதி மற்றும் உதவியாளர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்து மன்னார்-யாழ்ப்பாணம் பிரதான வீதி சிப்பியாறுப் பகுதியில் கடந்த சனிக்கிழமை நடந்துள்ளது. விபத்தில் படுகாயமடைந்தவர்கள் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை இலுப்பக்கடவைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (க-213)

## யாழ். நகரச்சந்தை நிலைவரங்கள் மாநகர முதல்வர் குழு ஆராய்வு

யாழ்ப்பாணம்,நவ.18

யாழ்ப்பாணம் மாநகரசபையின் நகர்ப்புற நவீன சந்தைக் கடைத்தொகுதி நிலைவரங்களை, மாநகர முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராசா தலைமையிலான குழுவினர் கடந்த வியாழக்கிழமை நேரில் சென்று ஆராய்ந்தனர். நவீன சந்தைக் கடைத் தொகுதிகளில் உள்ள குறைபாடுகள் மற்றும் தேவைகள் தொடர்பில் வர்த்தகர்களிடம் அவர்கள் கேட்டறிந்தனர். நடைபாதைகளில் பல்வேறு வியாபார நிலையங்கள் விற்பனைப் பொருள்களைக் காட்சிப்படுத்துவதால், பொதுமக்கள் எதிர்கொள்ளும் பாதிப்புகள் தொடர்பில் வர்த்தகர்கள் சுட்டிக்காட்டினர்.

நவீன சந்தைக் கடைத்தொகுதிகளில் மழைக்காலங்களில் ஏற்படும் பிரச்சினைகள், கடைத்தொகுதிகளின் பாதுகாப்புக்கான பிரதான கதவு பூட்டில்லாமை மற்றும் பொதுமலசல கூடங்களின் குறைபாடுகள் தொடர்பிலும் வர்த்தகர்கள் எடுத்துக்கூறினர். இவை தொடர்பில் துரித நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். மாநகரசபையின் நடவடிக்கைகளுக்கு வர்த்தகர்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் முதல்வர் தெரிவித்துள்ளார். (க-இ)



## வீட்டுக்குள் புகுந்த 8 அடி வெங்கிணாந்தி

முல்லைத்தீவு, நவ.18

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வீடொன்றுக்குள் சுமார் 8 அடி நீளமான வெங்கிணாந்திப்பாம்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் காலை இந்தப் பாம்பை அவதானித்த வீட்டின் உரிமையாளர் வனஜீவராசிகள் திணைக்களத்துக்குத் தகவல் வழங்கியுள்ளார். அங்கு சென்ற முல்லைத்தீவு மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தினர், பாம்பைப் பாதுகாப்பாக மீட்டு, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வவுனிக்குளம் சரணாலயத்தில் விடுவித்தனர். (க-19)



## மணியங்குளம் கிராமத்துக்குள் காட்டு யானைகள் அட்டகாசம்

### 80க்கும் மேற்பட்ட தென்னைகள் அழிவு

கிளிநொச்சி, நவ.18

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மணியங்குளம் கிராமத்துக்குள் இரவு வேளைகளில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. ஒரு மாதத்துக்குள் மட்டும் 80க்கும் மேற்பட்ட தென்னை மரங்களை யானைகள் அழித்துள்ளன.

இரவு வேளைகளில் யானைகள் திடீரெனப் புகுவதால் தங்களது இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்படுகிறது என்றும், அச்சத்துடன் இரவுப் பொழுதைக் கழிக்கவேண்டியுள்ளது என்றும் கிராம மக்கள் கூறுகின்றனர். நேற்றுமுன்தினம் இரவும் காட்டு யானை ஒன்று புகுந்து, 13க்கும் மேற்பட்ட தென்னை மரங்களை அழித்துள்ளது. யானைகள் கிராமத்துக்குள் வருவதைத் தடுக்க யானை வேலி அமைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மனித உரிமைகள் பேரவை பேயுமில்லை, கடவுளுமில்லை

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, நவ.18**

**ஐ.நா. மனித உரிமைகள் பேரவையைப் பிசாசு என விமர்சிக்கப்போவதும் இல்லை. கடவுள் எனப் போற்றப்போவதும் இல்லை. நாட்டு நலன் கருதி நடு நிலைமையுடன் செயற்படுவோம். உள்ளகப் பொறிமுறை தொடர்பான எமது நாட்டு நிலைப்பாடு தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு-செலவுத் திட்டக் குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பலஸ்தீன மக்களின் சுயாதீன உரிமை தொடர்பில் ஐ.நா. பொதுச்சபைக்கூட்டத்தொடரில் இலங்கையின் நிலைப்பாட்டை ஜனாதிபதி தெளிவுபடுத்தினார். அதேபோல நாடு மற்றும் நாட்டு மக்களின் பாதுகாப்புக்காக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மத்தியஸ்தத்துடன்செயற்பட்டது. ஜெனிவா மனித உரிமைகள் பேரவையைப் பேய் என்றோ கடவுள் என்றோநாம்குறிப்பிடமாட்டோம். மனித உரிமைகளை வலுப்படுத்த தேசிய பொறிமுறை ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நமது உறுதியான நிலைப்பாடு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது-என்றார். (எ-44)

## வெளிநாட்டுப் பயணச் செலவு

# ரணில் 1007 மில்லியன் அநுர 14.9 மில்லியன்

கொழும்பு,நவ.18

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவி வகித்தபோது, 22 மாதங்களில் 24 வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளார். அதற்காக 1007.346 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கடந்த ஒரு வருட காலத்தில் மேற்கொண்ட 8 வெளிநாட்டுப் பயணங்களுக்காக 14.9 மில்லியன் ரூபா மட்டுமே செலவாகியுள்ளது என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

2026 வரவு-செலவுத் திட்டத்தின் ஜனாதிபதி செலவீனத் தலைப்பின் மீதான குழுநிலை விவாதத்தில் அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

2000ஆம் ஆண்டுக்குப் பின்னரான அரசாங்கங்களில் முதல் ஒரு வருடத்தில் அதிகளவான சட்டவரைவுகளை எமது அரசாங்கமே நிறைவேற்றியுள்ளது. 22 சட்டவரைவுகளை இது வரையில் நிறைவேற்றியுள்ளோம்.

அநுரகுமாரவுக்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்தபோது அவருக்கு 39 ஆலோசகர்கள் இருந்தனர். அவர்களுக்கு அரசாங்கமே செலவு செய்தது. ஆனால் தற்போதைய ஜனாதிபதிக்கு 5 ஆலோசகர்கள் இருந்தாலும் அவர்கள் தன்னார்வ அடிப்படையில் சம்பளம் இன்றியே பணியாற்றுகின்றனர். ஜனாதிபதி செயலகத்தின் மேலும் பல செலவுகள் குறைக்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் ஜனாதிபதிகளின் வெளிநாட்டுப் பயணங்களின் போது பெருமளவில் நிதி செலவிடப்பட்டுள்ளது. அந்தச் செலவுகள் தற்போதைய ஜனாதிபதியால் குறைக்கப்பட்டுள்ளது-என்றார். (க-இ)

# ரம்புக்வெல குடும்பத்துக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை

கொழும்பு, நவ.18

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, அவரது மகன் ரமித் ரம்புக்வெல, மகள் உள்ளிட்ட நான்கு பிரதிவாதிகள் மீது இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு வழக்குகள் தொடர்பாக கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கெஹெலிய ரம்புக்வெல, ரமித் ரம்புக்வெல, மகள் அமாலி நயனிகா ரம்புக்வெல மற்றும் அவர்களது பணிப்பெண் நிபுணி கிரிஷ்ண ஜினா ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு வழக்குகளுக்கு அமைய இந்தக் குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல மற்றும் அவரது மகன் ரமித் ரம்புக்வெல ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மற்றொரு வழக்குக்கும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அமைச்சராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் முறைகேடாக சொத்துகளை ஈட்டியமை தொடர்பிலேயே இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)



**சுரங்கப் பணியக**

# முன்னாள் தலைவர் கைது

கொழும்பு, நவ.18

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் முன்னாள் தலைவர் அநுர வல்போல நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு நேற்றுக்காலை அவரைக் கைதுசெய்தது. சட்ட விரோத ஆட்சேர்ப்புக் குற்றச்சாட்டிலேயே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரியவருகின்றது. (எ-இ)

# முன்னாள் பிரதி சபாநாயகரிடம் வாக்குமூலம்

கொழும்பு, நவ.18

முன்னாள் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச நேற்றுக்காலை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையானார். இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்படும் விசேட விசாரணை ஒன்றுக்கு வாக்குமூலம் வழங்குவதற்காகவே அவர் ஆணைக்குழுவில் முன்னிலையாகியிருந்தார். (எ-இ)

## எல்லாம் கொஞ்சக் காலம் தான் - 11

**(இன்டைக்கு நேற்றையான் பதிவின்ர மிச்சம் தான் கண்டியளோ)**

**வேலைக்குப் போறேலை, உழைப்பு ஒண்டுமில்லை, பந்தாவா வெளிக்கிடுறாங்கள், கிழமைக்கு ஒரு புது பைக் வாங்கிறாங்கள், 'ஹைபை' செலவு செய்யிறாங்கள். எப்படி? எண்டு விசாரிச்சால், எக்கவுண்டுக்கு இரவில மட்டும் 500, 1000 என்று நிறைய பொழிஞ்சு இருக்கு. பகல்ல ஹீரோயின். இரவில சிங்கப் பெண்.**

**முந்தி வடக்கு, யாழ்ப்பாணம் எண்டால் உயர்தரப் பெறுபேறுகள் ஐலண்ட் ராங், படிப்பு, போட்டிகள், காற்பந்து, தடகளம், கிரிக்கெட், கூடைப்பந்து, வலைப்பந்து வெற்றி என்று பிரபலமானவங்கள் தான் அதிகம். அவங்களையே கொண்டாடித் திரிஞ்ச உலகம் இது. அந்த இடத்தை சமூகத்தில் பெற வருடக்கணக்காக கஷ்டப்பட்டு, தியாகங்கள் செய்து தங்களையே அர்ப்பணிச்சு வெற்றியும் கண்டாங்கள். அவங்களைப் போல வரணும் என்று ஆரோக்கியமான சமுதாயமும் பின்னால வந்தது.**

**இப்ப அப்படியில்லை, ரிக்ரொக்கில் பின்னணிப் பாட்டுப் போக முன்னால வந்து சீக்கு வந்த கோழி போல தலையை ஆட்டி, உடம்பை உலுப்பிட்டுப் போக, அதுக்குக் கொஞ்ச லைக் வந்தா பிரபல்யம். அவங்கட பாணியில சொன்னா 'செலிபிரேட்டியாம்'. அதுக்கான அர்த்தமே இவங்களால நாசமாகிட்டுது. கொஞ்சம் வெள்ளையா இருந்தா அது அவர்களை வழிஞ்சு கொண்டாடும் எண்ணிக்கையை அதிகரிக்கும்.**

**படிச்சுப் பட்டம் பெற்று, நிறுவனமொண்டில முக்கியமான பதவியில் இருக்கும் ஒரு பொம்பிளைப்பிள்ளை கிட்டடியில சொன்னாள், கிளாஸில படிப்பே வராது என்று தண்ணி தெளிச்சு விட்ட-ஒன்றின் வர்க்கம் என்னவென்றே தெரியாத -ஆட்கள்தான், இப்ப ரிக்ரொக்கில பிரபலமாகி சீன் போடுதுகள் உண்மை. ஆனால் ஆக்கள் என்றால்.**

**அந்தக் கவர்ச்சியான தூண்டுதலைத் தவிர அங்கை ஒண்டுமில்லை. மாஸ்க் போட்டு தலையை ஆட்டி அழகன் என்று நம்ப வைச்சு நகை திருடியது ஊரெல்லாம் அடிபட்ட ஒன்று. அதனைவிட பல கேஸ்கள் இங்க இருக்கு. இவர்களுக்கு பல தவறான வியாபார மார்க்கமெல்லாம் லிங் இருக்கு. இவர்களுக்கு பணம் வரும் பெரிய மூலம் வெளிநாட்டு அன்ரி, அங்கிள்ஸ். அது வேற பெரிய கதை.**

**சிம்பிளாச் சொன்னா உடுப்புக் கசங்காமல், வேர்க்காமல் சீன் என்ற ஒன்றை மட்டும் காட்டி வாழ்க்கையை நடத்தலாம் என்று ஒரு ஜெனரேசன் இங்க உருவாகுது. இதனை உலகம் என்று அதற்குப் பின்னால் செல்லும் இன்னுமொரு கூட்டம்.**

**இதெல்லாம் ஒரு முட்டுச் சந்தில போய் நிற்கும், எல்லாம் கொஞ்சக் காலம் தான் கண்டியளோ.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** வரவும்–செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையின் தேவையை நிறைவேற்றி மகிழும் வாய்ப்பு உண்டாகும். குடும்பப் பெரியவர்களுடன் கலந்துபேசி முக்கியமான முடிவு எடுப்பீர்கள். மாலையில் பள்ளி, கல்லூரிக் கால நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

**இடபம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** சிலருக்குத் தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**கடகம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளிக்கத் தேவையான பணம் கிடைத்துவிடும். உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்காகச் செலவு செய்யவேண்டி வரும். ஆனாலும், உற்சாகத்துக்குக் குறைவிருக்காது.

**சிம்மம்:** காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள் வழியில் செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்களால் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**கன்னி:** பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை அரவணைத்துச் செல்வது அவசியம். அவர்கள் கேட்டதை வாங்கிக் கொடுக்க முயற்சி செய்யவும். உறவினர்கள் மூலம் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**துலாம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும் போது பொறுமை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக்கூடும். சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டு. குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்படும் என்றாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**தனுசு:** உற்சாகமான நாள். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சகோதரர்கள் உங்களுடைய யோசனையை ஏற்றுக்கொள்வார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் அவசியத் தேவைகளுக்காக செலவு செய்யவேண்டிவரும். சிலருக்கு உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**கும்பம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாள். பிள்ளைகளால் வீட்டில் உற்சாகமும் கலகலப்புமான சூழ்நிலை காணப்படும். சிலருக்குத் தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**மீனம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயற்படவும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்குத் தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும்.

# காற்றால் முறிந்த மரம் போக்குவரத்துத் தடை

யாழ்ப்பாணம், நவ.18

நேற்றுமுன்தினம் பெய்த காற்றுடன் கூடிய மழை காரணமாக சுழிபுரம் பகுதியில் மரமொன்று வீதிக்குக் குறுக்கே முறிந்து விழுந்ததில் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டது. மின்கம்பமும் சேதமடைந்ததால் மின் தடையும் ஏற்பட்டது. வலி.மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் ச.ஜெயந்தன் தலைமையிலான குழுவினர் மரத்தை வெட்டி போக்குவரத்தைச் சீர்ப்படுத்தினர்.

கனமழை காரணமாக அராலிப் பகுதியில் 5 வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்த நிலையில், வீடுகளுக்குள் புகுந்த வெள்ளநீரை வெளியேற்றும் பணியிலும் அந்தக் குழுவினர் ஈடுபட்டனர். பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பொது இடமொன்றில் தற்காலிகமாகத் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று வலி.மேற்குப் பிரதேசசபைத் தவிசாளர் தெரிவித்துள்ளார். (எ-41-27)



## இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், நவ.18

இணுவில் மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் ஹனுமத் ஜெயந்தி இலட்சார்ச்சனைப் பெருவிழா எதிர்வரும் டிசெம்பர் மாதம் 8ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி 20ஆம் திகதி சனிக்கிழமை நிறைவடையவுள்ளது. தினமும் காலை, மாலை அபிஷேகம், பூஜை, அர்ச்சனை, ஹோமம், இசை ஆராதனை என்பன இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

18ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு இலட்சார்ச்சனைப் பூர்த்தி விழாவும், 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு அபிஷேகமும், காலை 7மணிக்கு வசந்தமண்டபப் பூஜையும், காலை 9மணிக்கு தேர்ப்பவனியும், மாலை 4.30மணிக்கு பிராயச்சித்த அபிஷேகமும், பஞ்சமுக அர்ச்சனையும் இடம்பெறவுள்ளன.

20ஆம் திகதி சனிக்கிழமை காலை 6மணிக்கு சங்கல்ப்பமும், காலை 10.30மணிக்கு 108 கலச அபிஷேகமும், காலை 11மணிக்கு ஆன்மிகவுரையும், மதியம் 12 மணிக்கு சந்தன அலங்காரப் பூஜையும், பிரசாதம் வழங்கலும் இடம்பெறவுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

## நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், நவ.18

வட்டுக்கோட்டை அரசாங்க ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையத்தின் மருத்துவ நோயாளர் நலச்சேவைச் சங்கத்தின் புதிய நிர்வாகசபைத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

போஷகராக மருத்துவமனைப் பொறுப்பதிகாரி மருத்துவர் எஸ்.நந்தகுமாரும், தலைவராக வெற்றிவேல் சக்திவேலும், உப தலைவராக ஆ.சிவக்குமாரும், செயலாளராக வி.வள்ளிகாந்தனும், பொருளாளராக சோ.நாதனும், உப செயலாளராக ச.அரவிந்தனும், நிர்வாகசபை உறுப்பினர்களாக சே.குகனேசன், ப.சிறிதரன், வி.தயாளன், தி.பூபாலசிங்கம், தி.ஜெர்மலா, ற.ரஜினி ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (எ-41)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், நவ.18

சைவ வாழ்வியலில் திருவிளையாடற்புராணம் பெறும் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடத்தப்படும் வாராந்தத் திருவிளையாடற் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர் சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. சிவநெறிப்பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் நிகழ்வில் பரஞ்சோதி முனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், சைவப்புலவர் பிரசங்க பூஷணம் செ. த. குமரனின் "வரகுணனுக்குச் சிவலோகங்காட் டிய படலம்" எனும் தலைப்பில் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன. சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)



# பருத்தித்துறை நகரசபைக்கு எதிராக மக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், நவ.18

வடமராட்சி பருத்தித்துறை நகரசபைக்கு எதிராக பருத்தித்துறை கொட்டடி வாழ் மக்கள் போராட்டம் ஒன்றை நேற்றுத் திங்கட் கிழமை முன்னெடுத்தனர். கொட்டடி மீனவர்களின் படகுத் தரிப்பிடத்துக்காகத் தூர்வாரப்பட்ட மண் இதுவரை அகற்றப்படவில்லை எனத் தெரிவித்தே மக்கள் போராட்டம் நடத்தியுள்ளனர். அந்த மண்ணை அகற்ற வேண்டும் என்று கோரி தவிசாளரிடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது. உடனடியாக மணலை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தவிசாளர் உறுதியளித்துள்ளார். (எ-41-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# மாறாத மகாவம்ச மனோநிலை

திருகோணமலை பிரட்ரிக் கோட்டை டச்பே கடற்கரையோரத்திலுள்ள ஸ்ரீ சம்புத்த ஜயந்தி போதி ராஜ விகாரை வளாகத்திற்குள் சட்டவிரோதமாக கட்டுமானப் பணிகள் இடம்பெற்ற சம்பவமும் அங்கிருந்து இரவு அகற்றப்பட்ட புத்தர்சிலை மீண்டும் நேற்று பொலிஸாரின் பாதுகாப்போடு கொண்டுவரப்பட்டு அமைக்கப்பட்டமையும், இலங்கையில் இன்னும் நிலைகொண்டிருக்கும் அதிகார அத்துமீறலின் நிர்வாணமான கோலத்தை மீண்டும் வெளிச்சத்துக்கு கொண்டு வந்துள்ளன. எவ்வித அனுமதியும் பெறாமல், சட்டத்தை மீறிய வகையில் கட்டுமானப் பொருட்களை இறக்கி, பெயர்ப் பலகை நடப்பட்டு, பிக்குவின் தலைமையில் விகாரையில் பணிகள் முன்னெடுக்கப்பட்டபோது, அவற்றை கண்காணிக்கச் சென்ற கரையோர பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளும், ஊடகவியலாளர்களும் அச்சுறுத்தப்பட்டு அங்கிருந்து அகற்றப்பட்டிருக்கின்றனர் முதல்நாளிரவு தன் மனச்சாட்சிப்படி- சட்டத்தின்படி- சரியான உத்தரவைப்பிறப்பித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், விடிந்ததும் விடியாததுமாக முன்னைய உத்தரவுக்கு மாறாக புத்தர்சிலையை அதே இடத்தில் வைக்கும்படி ஆணையிட்டதன் மூலம், மகாநாயக்கர்களிடமே இன்னமும் இலங்கையின் அதிகாரம் கொட்டிக்கிடக்கிறது என்பதும், சட்டமும் ஒழுங்கும் பௌத்தத்தின் முன்னால் மண்டியிட்டு நிற்பதும் நிதர்சனமாகியுள்ளன.

கரையோரப் பாதுகாப்பு அதிகாரிகள் முறைப்பாடு செய்ததன் பின்னரே, குறித்த சட்டவிரோதக் கட்டுமானம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டாலும், இது சம்பந்தமாக பொலிஸார் வழக்கு தொடர்ந்தாலும், அதே பகுதிக்கு வைக்கப்பட்டிருந்த புத்தர் நேற்றுமுன்தினம் இரவு அகற்றப்பட்டு மறுநாள் மீண்டும் அதே இடத்தில் பொலிஸார் பாதுகாப்போடு நிறுவப்பட்டிருப்பது மிகப் பெரிய முரண்பாடாகும். ஒரே அமைச்சரின் மாறுபட்ட இருவேறு உத்தரவுகள் -ஒன்று சட்டபூர்வமானது, மற்றொன்று அரசியல்-மத அழுத்தத்தினால் மாற்றப்பட்டதாகத் தோன்றுவது - இந்நாட்டில் யார் ஆட்சி செய்கிறார்கள் என்ற கேள்வியை மக்களிடையே எழுப்புகின்றது. அகிம்சையின் தத்துவத்தை போதித்த புத்தரின் பேரால், தமிழர் பகுதிகளில் மீண்டும் மீண்டும் நிகழும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள், எந்த அரசாங்கம் வந்தாலும் மாறப்போவதில்லை. மஹிந்த ஆண்டாலென்ன,ரணில்ஆண்டாலென்ன,அநுர ஆண்டாலென்ன இந்த நாட்டின் தலைவிதியைத் தீர்மானிப்பது பௌத்த மதத்தின் மகாநாயக்கர்களே. அரசியல் தலைவர்கள் மாறினாலும், மகாநாயக்கர்களின் உத்தரவே இறுதி முடிவாக மாறுகிறது என்பதை திருகோணமலை சம்பவம் நிரூபிக்கிறது. இது இந்த நாட்டில் சட்டம் அனைவருக்கும் சமமாக செயல்படவில்லை. மாறாக இந்த நாட்டின் சட்டதிட்டங்கள் யாவும் ஒரு மதத்துக்கும், ஒரு இனத்துக்கும் மட்டும் சாதகமாகப் பிரயோகிப்படுகின்றன என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

எல்லோரும் இலங்கையர், ஒன்றுபட்ட தேசம் என்பதைக் கோஷமிட்டுக் கூறும் அரசாங்கம், அந்தப் பொறுப்பை சட்டத்திலும் செயற்பாட்டிலும் நிரூபிக்க வேண்டும். ஆனால் நடைமுறையில், ஒரு இனத்துக்கும், ஒரு மதத்துக்கும் மட்டும் சலுகை அளித்து சட்டத்தை வளைக்கிற இன்றைய சூழலில், நல்லிணக்கம், ஒற்றுமை, அமைதி என்ற எண்ணங்கள் யாவுமே அடியோடு சீரழிகின்றன. தமிழர் வாழும் பிரதேசங்களில் சட்ட அனுமதியின்றி இடம்பெறும் கட்டுமானங்களும், அதனை எதிர்க்கும் அதிகாரிகள் அச்சுறுத்தப்படுவதும் ஊழலற்ற, மக்களாட்சிக்கான அடையாளங்கள் அல்ல. இவை கடும்போக்கு சிங்கள பௌத்த மகாவம்ச மனோநிலையின் வெளிப்பாடுகளே.இலங்கை உண்மையில் ஒன்றுபட்ட தேசமாக வேண்டுமெனில், முதலில் இந்த இருமுக அரசியல் போக்கை முடிவுக்கு கொண்டுவர வேண்டும். சட்டத்தை சட்டமாக , சமமாக மதிக்க வேண்டும்; மதத்தை அரசியலின் கருவியாக பயன்படுத்துவதை நிறுத்தவேண்டும். இல்லையெனில், 'நாமெல்லோரும் இலங்கையர்கள்' என்ற அழைப்பு வெறும் பொய்யான கோஷமாகவே பொலிவிழந்து போகும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



மரநடுகை மாதம் (நவம்பர்)

"மரங்களைக் காற்றைச் சலவை செய்யும் இயந்திரங்களாகவும், குளிர்விக்கும் பதனப்படுத்திகளாகவும் சொல்லித்தரும் அறிவியலும்,உயிர்காக்கும் மரங்களைப் பணங்காய்ச்சி மரங்களாகப் போதிக்கும் பொருளியலும் ஆதிக்கம் பெற்றுள்ள நிலையில் மரங்களுக்கும் எமக்கும் இடையிலான பண்பாட்டு உறவை மீட்டுருவாக்கம் செய்வது அவசியம் ஆகும். இந்தப் பண்பாட்டு உறவே மரங்கள் மீதான பற்றுதலை வளர்க்கும்."

– பொ.ஐங்கரநேசன் தலைவர் – (தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம்)–




# பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம் இறுதிக்கட்டத்தில்



## அமைச்சர் ஹர்ஷன தெரிவிப்பு

கொழும்பு, நவ.18

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கம் தொடர்பில் வழங்கப்பட்ட உறுதிமொழியை நிறைவேற்றுவதற்குரிய கட்டத்துக்கு வந்துவிட்டோம். புதிய சட்ட முன்மொழிவு தொடர்பாக மக்களிடம் கருத்துக்கோரும் பணி விரைவில் ஆரம்பமாகும் என்று நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு-செலவுத் திட்டக் குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சட்ட மறுசீரமைப்பு விடயங்களுக்காக நீதி அமைச்சால் பல குழுக்கள் அமைக்கப்பட்டன. அவற்றில் ஒன்றுதான் பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பானது.

இந்தச் சட்டம் பற்றி மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை என்னிடம் கையளிக்கப்பட்டுள்ளது. தற்போது மொழிபெயர்ப்பு நடவடிக்கை இடம்பெறுகின்றது. தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட பின்னர் மக்களிடம் கருத்துப் பெறப்படும்- என்றார். (எ-44)

# லைசென்ஸ் அச்சிடும் பணி மீள ஆரம்பம்

கொழும்பு, நவ.18

அச்சிடும் அட்டைகள் பற்றாக்குறை காரணமாக நிறுத்தப்பட்டிருந்த சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடும் பணி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது. கடந்த வாரம் அச்சிடும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும், தினமும் சுமார் 6 ஆயிரம் சாரதி அனுமதிப் பத்திரங்களைத் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. விண்ணப்பித்த 14 நாட்களுக்குள் புதிய ஓட்டுநர் உரிமங்களை வழங்கவும் திணைக்களம் திட்டமிட்டுள்ளது. (எ-இ)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு, நவ.18

நீர்கொழும்பு, குரன பகுதியில், உள்ளங்கையில் மறைத்துவைக்கக்கூடிய சுமார் 6 அங்குல நீளமுள்ள சிறிய துப்பாக்கியுடன் தொழிலதிபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று கொழும்பு குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது. இவ்வாறான துப்பாக்கி இதுவரை பாதுகாப்புப் படையினரிடமும் இல்லை எனக் கூறப்படுகின்றது.

இதுதொடர்பாக சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அவரது தந்தையிடமிருந்து அதைப் பெற்றதாகவும், தந்தை தற்போது உயிருடன் இல்லை எனவும் தெரிவித்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-இ)



# விசேட சோதனையில் பலர் கைது

கொழும்பு, நவ.18

பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்புகளில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

30,330 பேர் பரிசோதிக்கப்பட்டுள்ள நிலையில், சந்தேகத்தின் பேரில் 645 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 29 பேர் நேரடியாகக் குற்றங்களில் தொடர்புடையவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

பிடியாணைகளுக்கமைய 284 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 169 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்திய 24 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 16 பேரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பிற போக்குவரத்துக் குற்றங்களுக்காக 4,241 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது . (எ-இ)

நாளை

புதன்கிழமை – கார்த்திகை 3

19.11.2025

சுபநேரம் : 04.39 - 06.09

ராகுகாலம் : 12.09 - 01.39

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாத, மதவாத பிசாசுகளின் மீது நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படுமாம்!



## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.18

நாட்டில் சில இனவாத,மதவாதப் பிசாசுகள் உள்ளன. மக்கள் மத்தியில் இனவாத மற்றும் மதவாதப் பிரச்சினைகளை கொண்டுவர முயற்சிப்பவர்களுக்கு எதிராக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார். கொழும்பு தாமரைக் கோபுரத்தில் நேற்று நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில், திருகோணமலையில் சட்டவிரோதமாக வைக்கப்பட்ட புத்தர் சிலை தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

திருகோணமலை கடற்கரைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்ட பௌத்த வணக்கஸ்தலத்தில் வைக்கப்பட்ட புத்தர் சிலை நீண்டநேர போராட்டத்தின் பின்னர் அங்கிருந்து அகற்றப்பட்டது. நாட்டில் சில இனவாத,மதவாதப் பிசாசுகள் உள்ளன. அவர்களே இவ்வாறானவற்றைச் செய்கின்றனர்.

மக்கள் மத்தியில் இனவாத மற்றும் மதவாதப் பிரச்சினைகளைக் கொண்டுவர முயற்சிப்பவர்களுக்கு எதிராக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (எ-இ)

# வலுப்படுத்தப்படும் வெளிநாட்டு உறவு!

## அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, நவ.18

வெளிநாடுகளுடனான இராஜதந்திர உறவு வலுப்படுத்தப்பட்டு வருகின்றது. சீனாவில் மேலும் ஒரு தூதரகத்தை நிறுவுவதற்கு இலங்கை திட்டமிட்டுள்ளது. சீனாவில் இருந்து அதிகளவு வெளிநாட்டுப் பயணிகளை வரவழைக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு-செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

2026 ஆரம்பத்தில் சீனாவின் செங்டு நகரில் கொன்சல் ஜெனரல் அலுவலகம் அமையும். சீனாவில் சில நகரங்களில் இலங்கையின் கொன்சல் ஜெனரல் அலுவலகங்கள் அமைந்துள்ளன. இந்நிலையிலேயே புதிய அலுவலகம் அமைக்கப்படவுள்ளது. அதேபோன்று பிரேசிலிலும் கொன்சல் ஜெனரல் அலுவலகம் மீளத் திறக்கப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வந்த பின்னர் சிறந்த முறையில் இராஜதந்திர உறவு கட்டியெழுப்பப்பட்டுவருகின்றது. கடந்த ஒரு வருட காலப்பகுதிக்குள் 70 வரையான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. 150க்கும் மேற்பட்ட வெளிநாட்டுநிறுவனங்களுக்கு புதிய முதலீடுகளுக்குரிய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

உணவுப்பொருள்களுக்குரிய வரியை நீக்குவதற்கு அமெரிக்கா ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார். இதன்மூலமும் இலங்கைக்கு நன்மை கிட்டும்-என்றார். (எ-44)

# தொல்பொருள் ஆணைக்குழுவில் இணைய சிறுபான்மையின நிபுணர்களுக்குத் தயக்கம்

## பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

கொழும்பு, நவ.18

தொல்பொருள் தொடர்பான ஆணைக்குழுவில் உறுப்பினராக இணைவதற்கு, சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த துறைசார் நிபுணர்கள் இணக்கம் தெரிவிக்கவில்லை. சிறந்த பரிந்துரைகளை முன்வைக்கும் பட்சத்தில் மாற்றத்தை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன், அண்மையில் நியமிக்கப்பட்ட தொல்லியல் ஆணைக்குழுவுக்கு சிறுபான்மைச் சமூகப் பிரதிநிதிகள் இல்லை என்று அதிருப்தி தெரிவித்தார். இதற்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

தொல்லியல் ஆணைக்குழுவில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த மூவர் இருக்கின்றனர். இதில் இணைவதற்கு புத்திஜீவிகள் பலர் விரும்பவில்லை. இணைக்கப்பட்ட சிலரும் பல்வேறு தடவைகள் கூறியே இணைந்தனர். இதற்கு வரலாற்றில் இருந்த பிழையான அனுபவங்கள் காரணமாக இருந்திருக்கலாம். ஆனாலும் இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அமைச்சர் சுனில் செனவிக்கும் கூறியிருந்தேன். உங்களிடம் யோசனைகள் இருந்தால் அவற்றை முன்வையுங்கள். உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம்-என்றார். (கு-இ)



# தோட்டத் தொழிலாளர் வேதன உயர்வு; 28ஆம் திகதி சஜித் பதிலடி

கொழும்பு, நவ.18

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு விவகாரம் தொடர்பில் கட்சி மீது முன்வைக்கப்படும் விமர்சனங்களுக்கு எதிர்வரும் 28 ஆம் திகதி பதிலடி கொடுக்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பில் எதிரணி உறுப்பினர்கள் சிலர் எதிரான கருத்தை முன்வைத்தனர் எனச் சுட்டிக்காட்டி, மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் போராட்டங்கள் இடம்பெற்றன. இந்த நிலையிலேயே நேற்று நாடாளுமன்றத்தில் சஜித் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அமைச்சுக்கான குழுநிலை விவாதத்தின்போது இதற்குரிய பதில் வழங்கப்படும்.

மலையக மக்களுக்கு குடியுரிமை வழங்குவதற்கு ரணசிங்க பிரேமதாஸவே நடவடிக்கை எடுத்தார் என்பதை மறக்கவேண்டாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-44)

# பட்ஜெட்டுக்கு ஆதரவு

## சுதந்திரக்கட்சி ஒழுக்காற்று

கொழும்பு, நவ.18

உள்ளூராட்சிச்சபைகளின் வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு வழங்கிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராகக் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் சுதந்திரக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவாக வாக்களித்த சபை உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. அவர்களிடம் விளக்கங்கள் கோரப்பட்டுள்ளன. அவர்களுக்கு எதிராகக் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றுள்ளது. (எஇ)

# நாட்டின் பொருளாதார மீட்சிக்கு பெரமுன முழுமையான ஆதரவு

## நாமல் ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, நவ.18

நாட்டின் பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு நாங்கள் முழுமையான ஆதரவு வழங்குவோம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

போதைப்பொருளை இல்லாதொழிக்க அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைக்கு நாங்கள் நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்குவோம். பொதுஜன பெரமுனவின் முன்னாள் உறுப்பினர் சம்பத் மனம்பேரி போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டபோது, அவரைக் கட்சியில் இருந்து உடனடியாக நீக்கினோம். ஆனால் தேசிய மக்கள் சக்தியின் நகரசபை உறுப்பினரின் கணவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கட்சி மட்டத்தில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இதனை அலட்சியப்படுத்தமுடியாது. 2025ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் முன்மொழிவுகள் 50 வீதமேனும் நிறைவேற்றப்படவில்லை. கடந்த கால வரவு-செலவுத் திட்டங்களில் செல்வந்தர்களிடமிருந்து பெற்று, ஏழைகளுக்கு நிவாரணமளிக்கப்பட்டது. ஆனால் இந்த வரவு-செலவுத் திட்டம் ஏழைகளிடமிருந்து பெற்று செல்வந்தர்களுக்கு வழங்கும் போக்கில் காணப்படுகின்றது. நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கும், மக்களுக்கு நிவாரணமளிப்பதற்கும் நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். அனைத்தையும் வெறுக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் வைராக்கியம் எமக்கில்லை-என்றார். (கு-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வாக நாதமணி.மதுசூதனன் குழுவினரின் 'வேல்நாதம்' நாதஸ்வரக் கச்சேரி ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது. (எ-41-66)





## தொழில்முனைவோர் வார ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.18

உலகளாவிய தொழில் முனைவோர் வாரம் 2025 ஆம் ஆண்டுக்கான ஆரம்ப நிகழ்வு மேலதிக மாவட்டச் செயலர் க.சிவகரன் தலைமையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

'நாம் ஒன்றாகக் கட்டியெழுப்புவோம்' எனும் தொனிப்பொருளில் 2025ஆம் ஆண்டுக்கான உலகளாவிய தொழில் முனைவோர் வாரம் ஐ.சி.ரி.எ. மற்றும் டிஜிற்றல் பொருளாதார அமைச்சின் கூட்டு ஏற்பாட்டில் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பிரதமரும் கல்வி, உயர்கல்வி, மற்றும் தொழிற்கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் அலரிமாளிகையில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிகழ்வு நிகழ்நிலை மூலம் மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் காண்பிக்கப்பட்டதுடன் தொடர்ந்து உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெற்றது. நிகழ்வின் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலர் ம. பிரதீபன் கலந்து கொண்டார். (எ-41-9)

## யாழ். நகரப் பகுதியில் நீரிழிவுப் பரிசோதனை



யாழ்ப்பாணம், நவ.18

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு, யாழ்.நீரிழிவுக் கழகத்தால், நீரிழிவுப் பரிசோதனை யாழ். வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது.


பரிசோதனையில் இரத்த அழுத்தம், உடல் திணிவுச் சுட்டி பரிசோதிக்கப்பட்டு, நீரிழிவுப் பரிசோதனை நடத்தப்பட்டது. மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. பார்வைக்குறைபாடுடையவர்களுக்கு இலவசமாகக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன. வை.எம்.சீ.ஏயின் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோருடன் நீரிழிவுக் கழகச் செயலாளர் மற்றும் அங்கத்தவர்களின் ஒழுங்கமைப்பில் இந்த மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. (க-இ)

## 126 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

சாவகச்சேரி, நவ.18

வரணி சமுர்த்தி வங்கிக்கு உட்பட்ட 126 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் சிசுதிரிய புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு தென்மராட்சிப் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி அலகின் ஏற்பாட்டில், வரணி சமுர்த்தி வங்கியின் போதைப்பொருள் எதிர்ப்புக் கொடிதின சேமிப்பு நிதியிலிருந்து, இந்த உதவிகள் வழங்கப்பட்டன. பிரதேச செயலர் எவ்.சீ.சத்தியசோதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உதவிப் பிரதேச செயலர், கணக்காளர், சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (க-9)



## மாகாணசபை முறைமை மன்னாரில் கருத்தரங்கு

மன்னார், நவ.18

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஏற்பாட்டில், 'மாகாண சபை முறைமையும், அதிகாரப்பகிர்வும்' எனும் தொனிப்பொருளிலான கருத்தரங்கு, மன்னார் நகர மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் ஏ.ரி.லுஸ்ரின் தற்குரூஸ் தலைமையில் இடம்பெற்ற கருத்தரங்கில், மாகாணத்துக்குப் பகிரப்பட்ட அதிகாரங்கள் கல்வி ஓர் சிறப்புப் பார்வை எனும் கருப்பொருளில் வடமாகாண முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரனும், நிலையான தீர்வை எட்டுவதற்கான படிக்கல்லாக மாகாணசபை எனும் கருப்பொருளில் யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கோசலை மதனும், மாகாண சபையும்,வரலாற்றுத் தருணங்களும் எனும் கருப்பொருளில் எழுத்தாளர் கருணாகரனும், உள்ளூராட்சிகள் மீதான மாகாண சபையின் அதிகாரங்களும்,வரையறைகளும் எனும் கருப்பொருளில் சட்டத்தரணி சவிரியப்பு டலிமா சந்திரபோஸும் கருத்துரை வழங்கினர். தொகுப்புரையை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆற்றினார். நிகழ்வில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் அங்கத்துவக் கட்சிப் பிரதிநிதிகள், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள்,உள்ளூராட்சி சபைத் தவிசாளர்கள், உறுப்பினர்கள் இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளைப் பிரதிநிதிகள், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-56)





கோவிலாக்கண்டி அம்பலத்தார் அடி ஸ்ரீ உக்கிர வைரவர் ஆலயத்தின் கும்பாபிஷேகதின மணவாளக்கோல உற்சவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (எ-41-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பருத்தித்துறையில்

# டெங்கு பரவும் சூழல் 80,000 ரூபா தண்டம்!

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகர சபைகளுக்கு உட்பட பகுதிகளில் டெங்கு நுளம்பு பெருகும் ஏதுநிலையை வைத்திருந்த 10 ஆதன உரிமையாளர்களுக்கு பருத்தித்துறை நீதிமன்றால் 80 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகரசபை மற்றும் பருத்தித்துறை நகரசபையின் எல்லைக் குட்பட்ட பிரிவுகளில் கடந்த வாரம் டெங்குக் கட்டுப்பாட்டு களவிஜயம் மேற் கொள்ளப்பட்டது.

இதன்போது நுளம்பு பெருகக்கூடியவா றான சூழலினை வைத்திருந்த 10 ஆதன உரிமையாளர்களுக்கு எதிராக குறித்த நகரசபைகளுக் குப் பொறுப்பான பொதுச்சுகாதாரப் பரிசோதகரான ப. தினேஷால் பருத் தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வழக்குத் தாக்கல் செய் யப்பட்டது. குறித்த வழக்கு விசாரணையின் போது குற்றஞ்சாட்டப்பட்ட அனைத்து ஆதன உரிமையாளர்களும் குற்றத்தை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் தலா எட்டாயிரம் ரூபா வீதம் மொத்த மாக 80 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட் டது. (ச-100)

## வீடு வாடகைக்குண்டு

நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை கிழக்கில் அரச உத்தியோகத்தருடைய சிறிய குடும்பம் தங்குவதற்கு வீடு வாடகைக்குண்டு

தொடர்பு: சி.மகாதேவன் **076 217 4179**

(CS 59937) E

## மணமகள் தேவை


வலிகாமம் (V) 1988 ஆம் ஆண்டு பூரட்டாதி நட்சத்திரம், கிரக பாவம் 17. BSc, MSc ஆசிரிய மணமகனுக்கு அரச உத்தியோகத்தில் உள்ள மணமகள் தேவை.

**தொடர்பு: 077 154 7579**
**077 892 2440**

(CS 59931) A

## மரண அறிவித்தல்

தோற்றம்
22 . 11 . 1958



மறைவு
17 . 11 . 2025

### துரைச்சாமி மகேந்திரன் (மந்திரி)

கேசரி வீதி, தையிட்டியை பிறப்பிடமாகவும், வாளித்தொழிற்சாலை வீதி மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மகேந்திரன் நேற்று (17.11.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர்) - கனகம்மா அவர்களின் அன்பு மருமகனும், புஷ்பலோசனியின் (முன்னாள் பிரதி அதிபர் - கோண்டாவில் சி.சி.த.க பாடசாலை) அன்புக் கணவரும், திலக்ஷனின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற மீனாம்பிகை, சொர்ணாம்பிகை மற்றும் தேசமலர், ஞானசெல்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், மனோகரன் மற்றும் பத்மலோயினி, கமலலோஜனி, காலஞ்சென்ற வைகுந்தநாதன் மற்றும் நிமலலோஜினி, மினலோஜனி, செந்திநாதன், சிறீதரன், முரளிதரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**வாளித்தொழிற்சாலை வீதி, மாவிட்டபுரம்.**

**தகவல்: குடும்பத்தினர் 077 232 1316**

(CS 59932) E

## 31ம் நாள் நினைவஞ்சலி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
20 . 01 . 1972



மறைவு
21 . 10 . 2025

கடந்த மாதம் 21.10.2025 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் தர்மசேனன் ஜெயகுமார்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (18.11.2025) செவ்வாய்க்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் (20.11.2025) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

மேலும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், தொலைபேசி வாயிலாக ஆறுதல் அளித்தவர்களுக்கும் மேலும் பல வழிகளிலல் உதவிகள் புரிந்து எமது துயரில் தோள் கொடுத்தவர்களுக்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


**சம்பந்தப் பிள்ளையார் கோவிலடி, ஆனைக்கோட்டை.**

**குடும்பத்தினர்**

(CS/59934) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 07 . 1937



மறைவு
17 . 11 . 2025

### திருமதி குமரகுரு சோமேஸ்வரி

வேலணை பள்ளம்புலத்தைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காடு விளையாட்டு அரங்க வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி குமரகுரு சோமேஸ்வரி அவர்கள் நேற்று (17.11.2025) திங்கட்கிழமை கல்வியங்காட்டில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா – இராசம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற குமரகுருவின் மனைவியும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இந்திரா, சிவகுமார் (ஓய்வு பெற்ற தபால் அதிபர்), புஷ்பலதா (முன்னாள் விரிவுரையாளர் – கிழக்கு பல்கலைக்கழகம்), புஷ்பராணி (கணக்காளர்), Dr.கோணேஸ்வரி, சிவனேசன் (பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இரவீந்திரநாதன் (ஓய்வு பெற்ற ஆசிரியர் – யாழ்ப்பாண இந்துக் கல்லூரி), ரஜனி, முரளிதரன், செல்வகுமார், வைத்திய கலாநிதி தியாகேசன், ரம்யா ஆகியோரின் அன்பு மாமியாரும், மேனகா (Clinical Dietitian), கவிதாசன், அனந்திகா (Statistician), வைத்திய கலாநிதி நிர்மலக்கண்ணா, Dr.கீர்த்தனா, Dr.நிஷாந்த், பிரகாஷ் (கணினி பொறியியலாளர்), உமா, பிரணவன், Dr.சாமினி, தர்ஷன், Dr.அஷ்வினி (O.D), ரயன், கணன், சுபானு, மிதுன், கௌதம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆரபி, சிவன், ரவீன், ஆதீசன், ஜெயன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள், கல்வியங்காட்டிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (18.11.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.00 மணிக்கு நடைபெற்று, பின்னர் பூதவுடல் முற்பகல் 11.30 மணிக்கு செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.


**தொடர்பு எண்கள்:**

| | |
|---|---|
| இந்திரா (மகள்) | - +94 777 447 922 |
| சிவகுமார் (மகன்) | - +94 762 117 197 |
| புஷ்பலதா (மகள்) | - +44 7906 550 464 |
| புஷ்பராணி (மகள்) | - +1 416 268 1660 |
| கோணேஸ்வரி (மகள்) | - +61 406 380 741 |
| சிவனேசன் (மகன்) | - +968 9941 9794 |

**தகவல்: குடும்பத்தினர்**

(CS/30732) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# யாழ். பல்கலைக்கழகத்தின் இலக்கு மக்களைச் சென்றடையவேண்டும்!

## கலைப்பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம்,நவ.18**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உண்மையான இலக்கை அடையவேண்டுமானால் அதனை ஒரு சமூக நிறுவனமாக மாற்றியாகவேண்டும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மக்களைச் சென்றடைகின்றபோதுதான் சிறந்த மாற்றத்தைப் பெறமுடியும் என்று கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம் தெரிவித்துள்ளார். பருத்தித்துறையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தமிழ்ப் பெயர்த்தொகுப்பு நூல் அறிமுக நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமிழின் ஒரு அடையாளமாகும். அது ஒரு சமூக நிறுவனமாக மாறறப்படவேண்டும். அவ்வாறு அது ஒரு சமூக நிறுவனமாக மாற்றப்படும் போதுதான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் குறிக்கோள் உண்மையான இலக்கினை அடைய முடியும். ஆனால் இன்று அந்த நிலை மாறி வெறுமனே ஒரு கல்வி நிறுவனமாக, ஆய்வுகளைச் செய்கின்ற நிறுவனமாக அந்த ஆய்வுகளை உலகளாவிய ரீதியில் பரப்பிவிட்டு நிலைகொள்ளாமல் இருக்கக் கூடிய நிறுவனமாக அது மாறியிருக்கிறது. இந்த மாற்றத்தை நாங்கள் தொடர்ந்தும் அனுமதிக்கமுடியாது. ஆகவே யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தை சமூக நிறுவனமாக மாற்றவேண்டும். உருவாக்கப்பட வேண்டும். அதனுடைய வகிபங்கு என்பது அந்தப் பிரமாணத்தைப் பெற வேண்டும் - என்றார். (ச-100)

# வாசிப்பை வலுவூட்டும் விழிப்புணர்வுப் பேரணி

கொடிகாமம், நவ.18
தேசிய வாசிப்பு மாதம் ஒக்ரோபர் 2025ஐ முன்னிட்டு சாவகச்சேரிப் பிரதேசசபையின் கைதடி பொதுநூலகத்தின் ஏற்பாட்டில் வாசிப்பை வலுவூட்டும் காட்சிப்படுத்தல்களும் விசேட தேவையுடைய மாணவர்களின் ஆக்கங்களும் காட்சிப்படுத்தலுடன் "மறுமலர்சிக்காக வாசிப்போம்" எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வுப் பேரணியும் நூலகர் தலைமையில் கைதடி பொதுநூலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

சாவகச்சேரிப் பிரதேசசபை உறுப்பினர் செ.ஜெயபாலன் விழிப்புணர்வுப் பேரணியை ஆரம்பித்து வைத்தார். (ச-41-159)



வலி.கிழக்குப் பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் அமரர் இ. செந்தூரன் நினைவாக குருதிக்கொடை முகாம் அவரது குடும்பம் மற்றும் நண்பர்களின் ஏற்பாட்டில் அவரது இல்லத்தில் கடந்த 9ஆம் திகதி நடைபெற்றது. (ச-100,40)





# வேலைவாய்ப்பு வழிகாட்டல் வல்வையில் கருத்தரங்கு!

யாழ்ப்பாணம், நவ.18
இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்புத் தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கு வல்வெட்டித்துறையில் இடம்பெற்றுள்ளது. வல்வெட்டித்துறை நகரசபைத் தவிசாளரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ச-100)

### வடக்கு மாகாணத்தில்

# வீட்டுத்திட்டப்பயனாளிகள் தெரிவில் முஸ்லிம்களையும் உள்வாங்குங்கள்

## ரிஷாத் பதியுதீன் எம்.பி.கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.18
வடக்கு மாகாணத்தில் வீட்டுத் திட்டத்துக்குப் பயனாளிகள் தெரிவுசெய்யப்படும் போது, வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்கும் முன்னுரிமை வழங்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடமைப்புக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1990ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள், அங்கு மீள்குடியேறச் சென்றபோது, எந்தவொரு அரசியல் வாதிகளும் அவர்களைக் கண்டு கொள்ளவில்லை. எனினும், நாங்கள் தனியாருக்குச் சொந்தமான காணிகளைச் சிலருக்குக் கொடுத்தோம். அந்த மக்கள் அங்கு கொட்டில்களை அமைத்து, தண்ணீர் வசதிகள் இல்லாமல் மிகவும் கஷ்டத்துடன் உள்ளனர். கடந்த அரசாங்கத்தில் வீதிப்புனரமைப்பு, குடிதண்ணீர் வசதி வழங்கப்பட்டது. எனினும் அவர்கள் குடிசை வீடுகளில் உள்ளனர். தற்போது வடக்கில் 2 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

எனவே முஸ்லிம் குடும்பங்களையும் பயனாளிகளாக இணைக்கவேண்டும் - என்றார். (க-இ)



# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்யுங்கள்

## சர்வஜன நீதி அமைப்புக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.18
பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக இரத்துச்செய்யவேண்டும் என சர்வஜன நீதி அமைப்புக் கோரியுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவதற்கான சட்டமூலத்தை வரைவதற்காக நியமிக்கப்பட்ட குழு அதன் அறிக்கையையும், வரைவுச் சட்டமூலத்தையும் நீதி அமைச்சரிடம் கையளித்துள்ள நிலையில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேற்கூறிய அறிக்கையும் தயாரிக்கப்பட்டுள்ள சட்டவரைவும் பகிரங்கப்படுத்தப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. குறித்த கோரிக்கைக் கடிதத்தில் பேராசிரியர் ஜெயதேவா உயங்கொட, கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன, எரான் விக்கிரமரத்ன, ஏ.எம்.பாயிஸ், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம், பவானி பொன்சேகா, நடிஷானி பெரேரா, ஜெருஷா க்ரொசெட் தம்பையா, ஸ்வஸ்திகா அருலிங்கம், ரவீந்திரன் நிலோஷன், பெனிஸ்லோஸ் துஷான் ஆகியோர் கையெழுத்திட்டனர். (ச-25)



தச்சன்தோப்பு வேலம்பிராய் கண்ணகை அம்மன் ஆலயத்தில் பயிர் குளிர்த்திப் பூஜை வழிபாடு கடந்த 11ஆம் திகதி கலை 11 மணிக்கு நடைபெற்றது. அன்றைய தினம் மாலை மழையை வேண்டி கண்ணகை அம்பாளின் கும்ப ஊர்வலம் ஆரம்பித்து தச்சன்தோப்பு நாவற்குழி, மறவன் புலவு, கோகிலாக்கண்டி, தனங்களப்பு ஆகிய இடங்களுக்கு இரவுமுழுவதும் ஊர்வலமாகச் சென்று அதிகாலை விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. (ச-159,40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு மாகாணத்தில்

# 24, 25ஆம் திகதிகளில் கடும் காற்றுடன் மழை!

யாழ்ப்பாணம், நவ. 18

எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை மற்றும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகிய இரு நாள்களிலும் வடக்கு மாகாணத்தில் கடும் காற்றுடன் மழை பொழியும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் நேற்றுத் திங்கட்கிழமை இரவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

வடக்கு மாகாணத்தில் தற்போது கிடைக்கும் மழை படிப்படியாக குறைவடையும். ஆனாலும், ஒருசில இடங்களில் கனமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. கிழக்கு மாகாணத்தில் இன்று இரவு முதல் மழை படிப்படியாக மழை குறைவடையும். ஏற்கனவே யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு பகுதிகளில் நிலம் நிரம்பு நிலையை எட்டியுள்ளது. ஆகவே, எதிர்வரும் நாளகளில் கிடைக்கவுள்ள மழை தரைக்கீழ் நீராக ஊடுவடியாது.

எதிர்வரும் 24 மற்றும் 25ஆம் திகதிகளில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கன மழை கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் மிக வேகமான காற்று வீசுகை, நிலம் நிரம்பிய நிலை, கடல்நீர் மட்ட உயர்வு போன்றனவற்றோடு கிடைக்கும் தொடர்ச்சியான கனமழை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் குறிப்பாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் தாழ்நிலப் பகுதிகளில் வெள்ள அனர்த்தத்தை உருவாக்கும் - என்றார். (ம-66)

# சுயாதீன வழக்குத் தொடுநர் அலுவலகம் கண்துடைப்பே!

மூத்த சட்டத்தரணி இரத்தினவேல் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், நவ.18**

**இலங்கையில் பொறுப்புக்கூறல் என்பது கானல் நீராக உள்ள நிலையில், சுயாதீன வழக்குத் தொடுநர் அலுவலகம் சர்வதேசத்துக்குக் காண்பிக்கப்படும் கண்துடைப்பு அலுவலகம் என மூத்த சட்டத்தரணி கே.எஸ்.இரத்தினவேல் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான கற்கை நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற அரசியல் தீர்வும் பொறுப்புக்கூறலும் ஒரு எண்ணிம ஆவணக் காப்பக அறிமுக நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- சுயாதீன வழக்குத்தொடுநர் அலுவலகம் என்னைப் பொறுத்தவரையில் ஒரு கண்துடைப்பு அலுவலகமே. சர்வதேசத்தைத் திருப்திப்படுத்துவதற்காக அமைக்கப்பட்டது.

உலகில் பல்வேறு நாடுகளில் காணப்படும் சுயாதீன வழக்குத் தொடுநர் அலுவலகங்களில் ஒரு சில குறைபாடுகள் இருந்தாலும், அவை பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளைத் தீர்க்கும் அலுவலகங்களாகச் செயற்படுகின்றன. இலங்கையில் பாதிக்கப்பட்ட தரப்புகள் எதிர்பார்க்கின்ற பொறுப்புக் கூறல் விவகாரம் பின்னோக்கி நகர்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு இன்மையே காரணம்-என்றார். (எ-இ)



# தீட்சை வழங்கல்

யாழ்., நவ.18

ஐப்பசி மாத கடைசி வெள்ளிக்கிழமையை முன்னிட்டு சைவ பரிபாலன சபையின் இல.66 கல்லூரி வீதி நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை தீட்சை வழங்கும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

இதில் நாற்பதுக்கு மேற்பட்ட சைவ அன்பர்கள் தீட்சை பெற்றுக்கொண்டார்கள். (41)

யாழ்ப்பாணத்தில்

# பதிவுசெய்யப்படாத விடுதிகள் சட்டநடவடிக்கைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.18

யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் பதிவுசெய்யப்படாத விடுதிகளைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், பதிவுசெய்யாதவர்களுக்கு எதிராகச் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் பணித்துள்ளார்.

வடக்கு மாகாணச் சுற்றுலாப் பணியகத்தினருடனான மாதாந்தக் கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார். உரிய அதிகாரிகள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதல் சுற்றுலாத்தில், இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சுற்றுலாவிகள் தங்கும் விடுதிகளின் தரத்தைக் கண்காணிக்கவேண்டும். அதேவேளை வீதிகளில் குப்பைகள் மற்றும் கழிவுகளை வீசுபவர்களுக்கு எதிராக உள்ளூராட்சிசபைகள் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார். (க-66)

**காணி விற்பனைக்கு**

K.K.S வீதியில் மருதனார்மடச் சந்தியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி 750m தூரத்தில் 4.45 பரப்புக் காணி சேர்.பொன் இராமநாதன் வீதியில் உடன் விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.
மொத்த விலை 6 கோடி அதிக விலை கேட்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
பார்வையிடும் நேரம் பிற்பகல் 05 மணி தொடக்கம் 09 மணி வரை

தொடர்பு: 077 946 4393

**மரண அறிவித்தல்**

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 08 . 02 . 1961 |  | 17 . 11 . 2025 |

**Eng.சுந்தரலிங்கம் சுந்தரகுமார்**

**(ஓய்வுநிலை மாகாணப் பொறியியல் கட்டுமானப் பிரதிப் பணிப்பாளர்)**

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை கடற்கரை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் சுந்தரகுமார் நேற்று (17.11.2025) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சுந்தரலிங்கம் - யோகேஸ்வரியின் ஆசைமகனும், மகாதேவன் - ஞானாம்பிகை தம்பதியரின் அன்புமருமகனும், இந்திரகுமாரி (ஜெயந்தி)யின் அன்புக்கணவரும், நந்தகுமார், உதயகுமார், மாலதி, சுகந்தி ஆகியோரின் அன்புச்சகோதரரும், மலர், சரோஜினி ஆகியோரின் ஆசை மைத்துனரும், நேதாஜி (UK), பிருதிவி ஆகியோரின் அன்புத்தந்தையும், தாரணி (UK), பிரதீப்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், திகழன், ஆரெயன்(UK) ஆகியோரின் பாசமிகு பேரனும், ரவீந்திரன் (ரவிமாஸ்டர்-நோர்வே), சுரேந்திரன் (நோர்வே), நிலாந்தன், மகாஇந்திரன் ஆகியோரின் அன்பு மச்சானும், லதா, மீரா(நோர்வே), விஜயா, யூடி (நோர்வே) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும், சஞ்சயன், கீர்த்தனா, தீபனா, கேகெயன், காங்கேயன், சரண்யா, ஜெகந்தன் ஆகியோரின் ஆசைச் சித்தப்பாவும், தேஜஸ்வர், பிரகதீஸ்வர், லோகதீஸ்வர், யுகதீஸ்வர், ஆர்த்திகா, சத்யா, யுனிதா, ஜீனு ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.29.ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் உள்ள அவரின் இல்லத்திலிருந்து நாளை (19.11.2025) புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

Tel:077 273 1586 (CR 46514) A



வேலணைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட அல்லைப்பிட்டி முதியோர் சங்கத்தினரின் ஆன்மிகச் சுற்றுலா அண்மையில் இடம்பெற்றது. முதியோர் தேசிய செயலகத்தின் அனுசரணையில் பிரதேச சமூக சேவைக் [illegible] திருக்கேதீஸ்வரம் மற்றும் மடுமாதா தேவாலயம் போன்ற ஆன்மிகத் தலங்கள் தரிசிக்கப்பட்டன. (ச-41-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளலாய்...

அந்தச் சிலை, பௌத்த மத அனுட்டானங்களுடன் தொடர்புடையதாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

மியான்மர் நாட்டிலும் பௌத்தர்கள் வாழ்கின்ற நிலையில் அங்கு உயிரிழந்தவர்களின் நினைவாக கடலில் விடப்படும் மூங்கில் தெப்பங்கள் கடந்த காலங்களில் வடமராட்சிப் பகுதிகளில் கரையொதுங்கியிருந்தன. அவ்வாறே இந்தச் சிலையும் கரையொதுங்கியிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

குறித்த சிலை வளலாய் கடற்றொழிலாளர் சங்கக் கட்டடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-66-100-23)

## அகற்றப்பட்ட...

திருகோணமலை பிரட்ரிக் கோட்டை டச்பே கடற்கரையோரமாக சட்டவிரோதமான முறையில் பௌத்த வழிபாட்டுத் தலமொன்றை அமைக்கும் பணிகள் பிக்குகளின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தக் கட்டுமானம் தொடர்பில் பார்வையிடுவதற்காக அங்கு சென்ற கரையோரப் பாதுகாப்பு அதிகாரிகளும், ஊடகவியலாளர்களும் பிக்குகளாலும் சிங்கள கடும்போக்குவாதிகளாலும் அச்சுறுத்தப்பட்டு ஏற்கனவே திருப்பி அனுப்பப்பட்டிருந்தனர். இந்த விடயம் தொடர்பில் பொலிஸாரிடம் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட்டதுடன், நீதிமன்றத்தில் வழக்கும் தொடரப்பட்டிருந்தது. இருந்தபோதும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அங்கு கட்டுமானப் பணிகள் அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்டு, புத்தர் சிலையை நிறுவுவதற்கான முயற்சி பிக்குகளால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதைத் தொடர்ந்து, நேற்றுமுன்தினம் இரவு அங்கு புத்தர் சிலை ஒன்றும் கொண்டுவரப்பட்டது. இந்த சட்டவிரோத நடவடிக்கைக்கு அந்தப் பிரதேச மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில், அரசாங்கத்தின் உயர்மட்டங்களுக்கும் அறியப்படுத்தியிருந்தனர்.

இதையடுத்து, நேற்றுமுன்தினம் நள்ளிரவு அங்கு சென்ற பொலிஸார், புத்தர் சிலையை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தனர். அங்கிருந்த பிக்குகள் அதற்குத் தடைகளை ஏற்படுத்தியதுடன் பொலிஸ் அதிகாரிகள் மீது தாக்குதலும் நடத்தியிருந்தனர். பெரும் இழுபறியின் பின்னர் பொலிஸார் புத்தர் சிலையைக் கொண்டு சென்றனர். இந்த விடயம் பௌத்த பேரினவாத கடும்போக்காளர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில், நேற்று அந்தப் புத்தர்சிலை மீளவும் அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. சிலையை தூக்கிச்சென்ற பொலிஸாரே, கடும் பாதுகாப்புக்கு மத்தியில் அதை மீளவும் பிரதிஷ்டை செய்துள்ளனர்.

சிங்கள கடும்போக்குவாதிகளின் எதிர்ப்புக்கு அஞ்சி, பௌத்த ஆக்கிரமிப்புக்குத் துணைபோன அநுர அரசாங்கத்தின் செயற்பாட்டுக்கு தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் தமது அதிருப்தியையும் கண்டனத்தையும் வெளியிட்டுள்ளனர். (அ-ம-44)

## நகரசபை...

சபைத் தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ் போலுக்கு எதிராக நகரசபை செயலாளர் தாரணி கஜரூபன் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். இந்த முறைப்பாட்டுக்கு அமைவாக பருத்தித்துறை பொலிஸாரால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டபோது, 'இது நிர்வாக ரீதியாகக் கையளப்பட வேண்டியது எனவும், நகரசபைத் தவிசாளருக்கு எதிராக முறைப்பாடு செய்யும் முகாந்திரம் செயலாளருக்கு இல்லை என்பதால் குறித்த வழக்குத் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்' என்றும் நகரசபை தவிசாளர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நடராஜா சுஜீவன் விண்ணப்பம் செய்தார். இதையடுத்து நீதவான் இந்துஜா சிவலிங்கம் குறித்த வழக்கைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். (அ-ம-100)

## 2028ஆம்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் தொடர்பில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் விசாரணைகளை எதிர்வரும் 2028ஆம் ஆண்டளவில் நிறைவு செய்வதற்குத் தீர்மானித்துள்ளோம். இந்தத் திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அத்துடன், செம்மணி, மன்னார் உட்பட 17 மனித புதைகுழிகள் தொடர்பான அகழ்வுப் பணிகளுக்காக 22 பில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட நிதி இதுவரை செலவிடப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-44)

## வடமராட்சி...

ரூபா பெறுமதியான வலைகள் அறுத்து அழிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் வடமராட்சி மீனவர்கள் தெரிவித்ததாவது:-

வடமராட்சிக் கடற்பரப்பில் கடந்த சில நாள்களாக இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் அதிகரித்து வருகின்றது. ஒவ்வொரு நாளும் வடக்கு மீனவர்களின் வலைகள் வகைதொகை இன்றி அழிக்கப்படுகின்றன. இதனால், பல லட்சம் ரூபா நிதி இழப்பு ஏற்படுவதுடன், உயிர் பயத்தில் கடற்றொழில் நடவடிக்கையையும் கைவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

தற்போது கடற் கொந்தளிப்புக் காரணமாகவும், கடல் இரைச்சல் காரணமாகவும் இந்த இழுவைப் படகுகள் மிகவும் அண்மையில்வந்தபின்னரே அவற்றை உணரக்கூடியதாக உள்ளது. இராட்சத படகுகள் கடந்து செல்லும்போது ஏற்படும் கொந்தளிப்பால் எமது சிறிய படகுகள் கவிழும் ஆபத்து ஏற்படுகின்றது. மரணத்தோடு உறவாடியே மீனவர்களாகிய நாம் ஒவ்வொரு நாளும் கடலுக்குச் சென்று கரை திரும்புகின்றோம்.

ஆனால் அரக்க படைகளைப்போல் வரும் இந்தியப் படகுகளைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தற்போதைய அரசாங்கம் சொல்கின்ற போதிலும், செயலில் எந்த மாற்றத்தையும் நாங்கள் காணவில்லை. எனவே, இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்ந்தால், அவற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை நாங்கள் கையிலெடுப்போம். அதன் பின்னர் ஏற்படும் அசம்பாவிதங்களுக்கு நாம் பொறுப்பாளியாக முடியாது - என்றனர். (அ-ம-100)

## இந்திய...

நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர். பருத்தித்துறைக் கடற்பரப்பில் வைத்து கடந்த 3ஆம் திகதி மூன்று படகுகளுடன் தமிழக மீனவர்கள் 31 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பருத்தித்துறை நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, மீனவர்கள் 31 பேருக்கும் 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட தலா 6 மாதகால சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டு, அவர்கள் விடுவிக்கப்பட்டனர். அதாவது எதிர்வரும் 10 ஆண்டுகளுக்குள் அவர்கள் மீண்டும் அத்துமீறி மீன்பிடித்தால், தற்போதைய சிறைத்தண்டனையும் நடைமுறையாகும் என்பதே ஒத்திவைக்கப்பட்ட சிறையாகும்.

அத்துடன், மூன்று படகுகளையும் செலுத்திய நபர்களுக்கு தலா ஒரு மாதம் கட்டாய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (அ-ம-100)

## வனவளத்...

தற்போது எமது காணிகளை கையப்படுத்தும் நடவடிக்கைகளை வனவளத் திணைக்கள உத்தியோகத்தர்கள் மேற்கொண்டுள்ளனர். அங்கு விதைக்கப்பட்டுள்ள பயிர்களை அழித்து தேக்கு மரம் நடும் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

உழவு இயந்திரங்களை விவசாய பயிர்களுக்கு மேலாக ஓட்டிச்சென்று பயிர்களை சேதப்படுத்தி வருகின்றனர். இதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. காணிகளைப் பதிவுசெய்தற்கான ஆவணம் எங்களிடம் இருக்கிறது. வனவளத் திணைக்களத்தின் இந்த நடவடிக்கையைத் தடுத்து எமது பூர்வீகக் காணிகளை மீட்டுத் தரவேண்டும் என்று அரசாங்கத்திடம் கோரிக்கை விடுகின்றோம் - என்றனர். (அ-எ-110)

## நம்பி...

பொன்னம்பலம் அரசாங்கத்தைக் கண்டித்துள்ளார்.

திருகோணமலையில் சட்டவிரோதமாகப் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ள விடயம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திருமலையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட புத்தர் சிலையை அகற்றிய போது, சாதாரண சிங்கள மக்கள் அதை எதிர்க்கவில்லை. ஏனெனில், இனவாதத்தையும் மதவாதத்தையும் நீக்குவதாக நீங்கள் சொன்னதை நம்பி அவர்கள் உங்களுக்கே வாக்களித்திருந்தார்கள். திருகோணமலைக்கான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரையும் அவர்கள் தெரிவு செய்திருந்தார்கள்.

புத்தர் சிலையை அகற்றுவதற்காக எடுத்த நடவடிக்கையை எதிர்த்ததெல்லாம், சிங்களக் காடையர்கள் மட்டுமே. அந்த இனவாத மதவாத காடைத்தனத்தை கண்டு நீங்கள் பின்வாங்கியிருக்கக் கூடாது. உண்மையில் நீங்கள் என்ன செய்திருக்க வேண்டுமெனில், மக்களிடம் சென்று எது சரி? எது பிழை? என்பதையும், எப்படியான அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது எனவும் நேர்மையுடன் சொல்லியிருந்திருக்க வேண்டும் - என்றார். (அ-ம-27)

## அநுரவுடைய...

மன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வென்றவன் பக்கமே வரலாறு சாயும் என்பதையும், வெல்பவன் சொல்வதே வரலாறாகும் என்பதையும் இனவாதம் பழுத்துப்போயுள்ள இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகள் வெளிப்படுத்துகின்றன.

முல்லைத்தீவில் குருந்தூர் மலை, நெடுங்கேணியில் வெடுக்குநாறி மலை, யாழ்ப்பாணத்தில் தையிட்டி, தற்போது திருகோணமலையில் சிறிசம்புத்த ஜயந்தி போதிவர்த்தன விகாரை, ஈழத்தமிழர்களின் பூர்வீக இடமெல்லாம் சட்டம் மௌனிக்க, அரச இயந்திரங்கள் காவல் காக்க, தமிழர்களை அடித்தும் அச்சுறுத்தியும் தடுத்தும் அறத்தைக் கொன்று விகாரைகள் எழுப்புகின்றன. வடக்கு, கிழக்கில் இடம்பெறும் இத்தகைய நீதிக்குப் புறம்மான பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளை நாங்கள் எந்தத் தயக்கமும் இல்லாமல் எதிர்க்கின்றோம் - என்றார். (அ-ம-44)

## புத்தர்...

ஸார் தம்முடன் எடுத்துச் சென்றனர் இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற பதற்றம் தொடர்பில், அமைச்சர் ஆனந்த விஜேபால நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்ததாவது:-

திருகோணமலை சம்புத்த ஜயந்தி விகாரையில் வைக்கப்பட்ட புத்தர்சிலை தொடர்பில் பதற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதன்போது, பொலிஸார் சிலையை அகற்றிவிட்டனர் என்று தவறான தகவல்கள் பரப்பப்படுகின்றன. உண்மையில் சிலையை பொலிஸார் அகற்றவில்லை. பதற்றநிலைகளால் சிலைக்குச் சேதம் ஏற்படக்கூடும் என்று பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்தே, சிலையைப் பாதுகாக்கும் நோக்குடன் பொலிஸார் அந்தச் சிலையைத் தம்முடன் கொண்டு சென்றனர். மற்றும்படி சிலையை அகற்ற வேண்டும் என்ற நோக்கம் பொலிஸாருக்கு இல்லை - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பட்ஜெட் எதிர்பார்ப்புகள் நிறைவேறுவது மிகக்கடினம்

## சுஜீவ சேனசிங்க எம்.பி. தெரிவிப்பு

**கொழும்பு, நவ.18**

**அரசாங்கம் முன்வைத்துள்ள வரவு-செலவுத் திட்டத்தில் எதிர்பார்ப்புகளே அதிகம். ஆனால் அந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு எந்த யோசனையும் முன்வைக்கப்படவில்லை என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற வரவு-செலவுத் திட்டத்தின்மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த ஆண்டு அரசாங்கம் ஒதுக்கிய நிதியில் பல வேலைத்திட்டங்கள் நிறைவுசெய்யப்படாமல் அந்த நிதி மீண்டும் திறைசேரிக்குச் சென்றுள்ளது. இதற்கு அவர்களின் இயலாமையே காரணம். ஜனாதிபதி சமர்ப்பித்திருக்கும் வரவு-செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் விடயங்களே அதிகமாக உள்ளன. ஆனால் அவை நிறைவேறுவதற்கு வாய்ப்பில்லை. நாட்டின் அபிவிருத்திக்குப் பிரதானமாக 4 விடயங்கள் தேவைப்படுகின்றன. வருமானத்தை அதிகரிப்பது, நேரடி முதலீடு, தொழில் உருவாக்குதல் மற்றும் நவீன தொழிநுட்பம். இவற்றை மேற்கொள்ள வரவு-செலவுத் திட்டத்தில் இருக்கும் யோசனைகள் என்ன? இவற்றை அடையாமல் நாட்டை அபிவிருத்தி செய்யமுடியாது. கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் அரசாங்கம் 11 சட்டவரைவுகளைச் சமர்ப்பித்திருந்தது. அவற்றில் ஒன்றுகூட நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்படவில்லை. இவர்களுடன் வேலை செய்ய முடியாது என கடந்த ஒருவருடத்தில் 26 அதிகாரிகள் பதவி விலகியுள்ளனர்.

அரசாங்கம் தேர்தல் ஒன்றை நடத்தினால் அரசாங்கத்தின் நிலைமையைத் தெரிந்துகொள்ளலாம். அதனால் மாகாணசபைத் தேர்தலை அரசாங்கம் அடுத்த வருடம் நடத்தப்போவதில்லை- என்றார். (எ-இ)

# சஜித்தின் இந்தியப் பயணம் தெரியப்படுத்தப்படவில்லை

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு,நவ.18

கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் இந்தியப் பயணம் தொடர்பில் தனக்கு எதுவும் தெரியப்படுத்தப்படவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாளர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

புதுடெல்லிப் பயணத்தின்போது கட்சி எம்.பி.க்களை சஜித் உள்வாங்காமை தொடர்பில் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில், சஜித்தின் புதுடெல்லிப் பயணம் அதிகாரபூர்வ இராஜதந்திர விஜயமா? என கலாநிதி ஹர்ஷ டி சில்வாவிடம் வினவப்பட்டபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

சஜித் பிரேமதாஸவின் இந்தியப் பயணம் எனக்குத் தெரியப்படுத்தப்படவில்லை. ஊடக செய்திகள் ஊடாகவே அறிந்தேன் என்றும் குறிப்பிட்டார். இதேவேளை ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியல் புள்ளியாக கலாநிதி ஹர்ஷ டி சில்வா கருதப்படும் நிலையில் குறைந்தபட்சம் அவரையாவது சஜித் உள்வாங்காமை தொடர்பில் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. (ச-44)

# நிறைவேற்று அதிகாரத்தை ருசிக்க ஆரம்பித்தார் அநுர

## குற்றஞ்சாட்டுகின்றார் அஜித் பி பெரேரா

கொழும்பு, நவ.18

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் ருசிக்க ஆரம்பித்துவிட்டார். அதனாலேயே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் உள்ளடங்கலாக புதிய அரசமைப்புத் தொடர்பாக அவர் மௌனம் காக்கிறார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுப் பணிப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் 2ஆவது வாசிப்புமீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

புதிய அரசமைப்பு இயற்றப்படும் என தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளிக்கப்பட்டிருந்தது. எனினும், இதற்குரிய நடவடிக்கை இன்னும் ஆரம்பமாகவில்லை. நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களைத் தற்போதைய ஜனாதிபதியும் ருசிக்க ஆரம்பித்துவிட்டார் போலும். மாகாணசபைத் தேர்தல் சம்பந்தமாகவும் வாக்குறுதி வழங்கப்பட்டது. அதுவும் நடக்கவில்லை. சட்டம் இயற்றித் தர வேண்டும் என்று ஜனாதிபதி தற்போது கூறுகின்றார். பழையமுறைமையின் கீழ் மாகாணசபைத் தேர்தலை நடத்தலாம். இதுதொடர்பில் நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையொன்றுகூட முன்வைக்கப்பட்டுள்ளது. மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்குரியஏற்பாடுகளுக்கு நாம் முழு ஆதரவை வழங்குவோம். மாகாணசபைகளில் மக்கள் பிரதிநிதித்துவம் இல்லாதது ஜனநாயக விரோதமாகும், அதனால் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும். எல்லா விடயங்களைப் பற்றியும் பேசும் ஜனாதிபதி, புதிய அரசமைப்புப் பற்றி ஏன் மௌனம் காக்கின்றார்? புதிய அரசமைப்பை இயற்றுவதற்காக இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவை? அதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா?-என்றார். (எ-44)



# அரசாங்கம் வாகனம் வழங்கினால் அதை நிராகரிக்கப் போவதில்லை!

## *சாமர சம்பத் எம்.பி. தெரிவிப்பு*

கொழும்பு, நவ.18

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசாங்கத்தால் வாகனம் வழங்கப்படுமானால் அதை நிராகரிக்கப்போவதில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனம் வழங்கவேண்டும் என்று நான் கோரவில்லை. மாறாக பாதுகாப்பு வழங்கவேண்டும் என்றே வேண்டுகோள் விடுத்துள்ளேன். அந்தக் கோரிக்கை இன்னும் நிறைவேற்றப்படவில்லை. வாகனம் வழங்கப்பட்டால் அதனை நிராகரிக்கமாட்டேன். ஏனெனில் பதுளையில் இருந்து கொழும்பு வருவதற்கு வாகனம் அவசியம்.

அதேவேளை, எதிரணி உறுப்பினருக்குரிய கடமையை நான் சரிவர நிறைவேற்றிவருகின்றேன். அரசாங்கம் தவறிழைக்கும் பட்சத்தில் அதைச் சுட்டிக்காட்டும் உரிமை எனக்கு உள்ளது. நுகேகொடயில் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள பேரணியில் நான் கலந்துகொள்வேன். சுதந்திரக்கட்சியாக நாம் களமிறங்குவோம் - என்றார். (எ-44)

# யாழ்ப்பாணம் நகரிலேயே அதிகூடிய மழைவீழ்ச்சி!

யாழ்ப்பாணம், நவ. 18

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் நேற்றுத் திங்கட்கிழமை காலை 8.30 மணி வரையான 24 மணி நேரத்தில் இலங்கை முழுவதும் அதிகூடிய மழைவீழ்ச்சி யாழ்.நகரிலேயே பதிவாகியுள்ளதாகத் திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய, இந்தக் காலப் பகுதியில் யாழ். நகரில் 101.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தினர் தெரிவித்தனர்.

அத்துடன், யாழ்ப்பாணம் கோட்டை மற்றும் பண்ணைப் பகுதியில் 101.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், நெடுந்தீவில் 94.6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், திருநெல்வேலியில் 91 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், அச்சுவேலியில் 88.6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், மீசாலையில் 86.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், தெல்லிப்பழையில் 81.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது எனவும் திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தினர் மேலும் குறிப்பிட்டனர். (ம-66)

பணியாளர்கள் தேவை
யாழ் நகரில் இயங்கும் பொருட்கள் விநியோகிக்கும் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் உடனடியாக தேவை.
- விற்பனை பிரதிநிதி
- வாகன சாரதி
தொடர்பு:- 071 175 5665
(CS/59933) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org